MCOP.No. 7/2019
Date : 27.11.2025
Pw – 2
பெயர்: கிருஷ்ணன்
த/பெ: மாரியப்பன்

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நானும் இந்த விபத்தில் காயம்பட்ட சுப்பிரமணியும் விறகு வெட்டும் வேலை செய்து வருகிறோம். நான் மேற்படி சுப்பிரமணியத்திடம் விறகு வெட்டும் வேலை செய்து வருகிறேன். சுப்பிரமணியன் சொந்தமாக விறகு வியாபாரம் செய்கிறார்.

மேற்படி சுப்பிரமணியன் நாள் ஒன்றுக்கு தற்போது ரூ.1000/– வருமானம் பெற்று வருவதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ரூபாய் ஆயிரம் பெற்றுவருவதற்கு ரசீது எதுவும் வழங்கப்படுவதில்லை.

விறகு வியாபாரத்தை நிரந்தரமாக செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. சுப்பிரமணியன் எனக்கு உறவுக்காரர் அல்ல. அவர் எனக்கு பழக்கம்தான். சுப்பிரமணியத்திடம் நான் விறகு வெட்டும்வேலை செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் தாக்கல்செய்யவில்லை.

மேற்படி சுப்பிரமணியன் விறகு வியாபாரம் செய்யவில்லை என்று சொன்னாலும், அவரிடம் நான்வேலை செய்யவில்லை என்று சொன்னாலும், சுப்பிரமணித்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. சுப்பிரமணியத்திடம் நான் விறகு வெட்டும் வேலை செய்யாத காரணத்தினால் தான் அது சம்மந்தப்பட்ட ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– கிருஷ்ணன்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.

Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.